




திரு நபி பேரர்
திரு நாகூர் நாயகம்

வரலாற்று சுருக்கம்



தொகுப்பாக்கம் : அடியற்கை M.J. ரியாஜ் அலி

வெளியீட்டாளர்

அல்ஹாஜ் M.Y. சுல்தான் கபீர் சாஹிபு, காதிரி
நாகூர் தர்கா பரம்பரை ஆதீனம் & பங்குதாரர்
உறுப்பினர், நாகூர் தர்கா ஆலோசனைக் கமிட்டி,
தலைவர், மேல நாகூர் தர்கா நிர்வாக கமிட்டி

முதல் பதிப்பு – மே 2010
இரண்டாம் பதிப்பு – ஜூலை 2012
உரிமை – வெளியீட்டாளருக்கே (இலவச வெளியீடு)

Printed & Composed by

MYS DIGITAL

28/4, Dargah Tank South Street,
Nagore Shariff - 611 002.
Cell : 94436 78983, 97904 86871

அல்ஹம்துலில்லாஹ் அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரசூலிஹில் கரீம்

மதிப்புரை

சென்னை (சைதாப்பேட்டை பாவா) மௌலானா, மௌலவி முபையினுல் இர்பான் அல்ஹாஜ் **A. முஹம்மது ஈசா காதிரி** அவர்கள் வழங்கியது.

13.05.2010–ம் தேதி அன்று நாகூர் எஜமானின் கொடி ஏற்று விழாவிற்கு வந்தபோது ஆஷிகே காதிர்வலி, அன்புத்தம்பி ரியாஜ்அலி அவர்களை மெஹர் மஹாலில் சந்திக்க நேர்ந்தது. அது சமயம் எஜமானருடைய வரலாற்று சுருக்கத்தை எழுதியுள்ளேன் என்று அதன் கைப்பிரதியை தந்தார். மதிப்புரை வழங்க சொன்னார். அதுவே மதிப்புள்ளது. அதற்கு மதிப்பெழுத என்னால் இயலுமா என்ன ? இருப்பினும் அவரின் முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மதிப்புரை எழுத முனைந்தேன். பக்கங்களை புரட்டும் போது அந்த கருணைக்கடலின் வரலாற்று நுணுக்கங்களை கண்டேன். கற்கண்டை முழுவதுமாக துகழ் துகழாக்கி ஒரு துண்டை எடுத்து வைத்தாலும் சுவைப்பது போல கருணைக்கடலின் வாழ்க்கை வரலாற்றின் எந்த முனையை கண்டாலும் அதில் அற்புதமும், ஆச்சரியமும், ஷரீயத்தும் கனபரிமானமிக்க ஆன்மீகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். ஆன்மீக கடலின் அலையில்லா பகுதியில் ஓர் குருவி அமர்ந்து இந்த கடலை முழுவதுமாக பருகி விட எண்ணி முயன்று முடிந்தவரை பருதியதாம். அதுபோன்று கருணைக்கடலின் வரலாற்றினை இவர் சுருக்கி தர முயன்றது.

எஜமானார் மீது அவர் எல்லையில்லா அன்பு கொண்டிருப்பதை காட்டுகிறது. என் 60 வயதில் எஜமானைக் காண பலமுறை வந்த நான் இன்று தான் எஜமானின் கொடியேற்றம் கண்டேன். சுப்ஹானல்லாஹ்!!

எத்தனை மன்னர்களின் மணிமுடிகள் தோன்றி மறைந்திருக்கின்றன. எத்தனையோ சின்னங்கள் வண்ணங்களில் வந்த கொடியெல்லாம் மறைந்தே போயின. அந்த கொடிகளுக்கு அதிபதியான மன்னர்களும் மாண்டு போனார்கள். ஆனால் எஜமானின் கொடிக்கொரு வரலாறு உண்டு. சிங்கப்பூராவில் பக்தியோடு செய்தெடுக்கப்பட்டு கண்ணியத்தோடு கடல் மார்க்கம் வந்தது. இன்று ஆன்மீகத்தோடு ஆகாய வழி வருகிறது. நாகை மக்களோ நாங்கள் ஒருகாலும் எஜமானின் கொடிக்கு தரும் கண்ணியத்தை விட்டு கொடுக்க மாட்டோம் என்று நெஞ்சம் நிறைய பக்தி சுமந்து சிந்தை நிறைந்த அருள் சுமந்து சிரமேல் ஏற்று சிங்காரமாய் வரும் காட்சி இவ்வையகத்து வரலாற்றில் எவருக்கேனும் உண்டு என்று சொல்ல இயலுமா ? 2500 ஆண்டு கால மன்னராட்சி அழிக்கப்பட்டிருக்கிறது. பாரம்பரியர்கள் எங்கே ? இன்று காணாமல் போய்விட்டன. எங்கள் கல்வி நிறைந்த காருண்ய நாதரின் பாரம்பரியமோ ஆண்டு தோறும் பெருகி 2500 க்கும் அதிகமான மக்களை, ரேசன் கார்டு, வாக்காளர் அட்டை ஆதாரத்துடன் வையகத்தில் தந்திருக்கிறது என்றால் மிகையாகுமா ? என்ன ? வருத்தம் ஒன்றை தெரிவித்தார் நூலாசிரியர்.. இக்காலத்தில் ஆன்மீகத்தை மக்களில் சிலர் நகைக்கின்றனரே என்று! அவருக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் எக்காலத்துக்கும் பொதுவான ஒன்றை ஒருசமயம் ஹஜரத் ஹசன் பசரி (ரஹ்) அவர்கள் சொன்னார்கள். அன்றைய சஹாபாக்களை பற்றி இன்றைய முஸ்லிம்களிடத்தில் சொன்னால் அவர்களின் சொல், செயல், நடைமுறை, தியாகம் இவைகளைப் பார்த்து இவர்களெல்லாம் பைத்தியக்காரர்கள் என்று சொல்வார்கள். அந்த சஹாபாக்களிடத்தில் இந்த முஸ்லிம்களை காட்டினால் இவர்களின் நடை, உடை, பாவனை, பேச்சு எல்லாம் ஷைத்தானியத்தாக உள்ளது. நிச்சயமாக இவர்கள் எல்லாம் ஷைத்தான்கள் என்று சொல்வார்கள் தம்பி என்று சொன்னேன்.

திருமறையின் திருவசனங்களில் இறைவன் இபிலீசை சபித்த காரணம் ஆதம் (அலை) அவர்களுக்கு சுஜூது (மரியாதை) செய்ய மறுத்தது தான். அல்லாஹ்வே களிமண்ணால் செய்த ஆதம் (அலை) அவர்களை பார்த்து மரியாதை செய்ய சொன்னான் என்று திருமறை கூறுகிறது. நமக்கு விளங்குகிறது. இந்த பெரியோர்களின் மண்ணறைகளை மதிக்காது புறக்கணிப்போரும் இறைவனால் சபிக்கப்பட்டோர் என்பதற்கு இந்த ஒரு ஆயத்தே போதும் *(வஇத்குல்னா லில் மலாயிக திஸ்ஜுதூலிஆதம பஸஜது இல்லா இப்லீஸ் அபா வஸ்தக்பர வகான மினல் காஃபிரீன்)*

எனவே கருணைக்கடல் எஜமானின புகழ்பாடும் உங்களின் உள்ளமும், இல்லமும் அருளால் மணக்கும். கிடைத்த வாழ்வை பெரிய வாழ்க்கையாக அப்படியே வாழ்ந்து செத்து மடிபவன் மனிதல்ல. சொல்லும், செயலும், எண்ணமும், ஆன்மாவும், புனிதப்படும் போது அவன் மனிதப்புனிதமாக மனிதருள் மாணிக்கமாக ஆகிவிடுகிறான். மனிதனை மாணிக்கமாக்க மாணிக்கப்போர் தந்த மாணிக்கம் தான் நம் எஜமான் என்று கூறி வாசகர் பெருமக்களும், இந்நூல் வெளிவர பெரும் முயற்சி கொண்ட என் ஆருயிர் நண்பரும், அந்த கருணைக்கடல் தர்பாரின் ஆலோசனை கமிட்டி உறுப்பினருமாகிய ஹாஜி M.Y. சுல்தான் கபீர் சாஹிப் காதிரி அவர்களும், அவர்கள் குடும்பத்தினரும், மிஷ்கினாகிய நானும், என் சந்ததியினரும், சூரியன் உதிக்கும் காலமெல்லாம் எஜமானின் திருப்பாத வடியில் ஈருலக பேரும் பெற எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் செய்வானாக ஆமீன்...

படித்துணருங்கள்... பயன் பெறுங்கள்...

அல்ஹாஜ் A. முஹம்மது ஈசா காதிரி

மறையகம் – சைதை, சென்னை.

யாகாதிர்

முன்னுரை

நஹ்மதுஹூ வநுஸல்லி அலா ரசூலிஹில் கரீம் (ஸல்)

சற்றே ஏறக்குறைய ஐநூறு ஆண்டுகளுக்கு முன் நம் மூதாதையர்களுடன் வாழ்ந்து இன்றளவும் நாம் தனித்துவ தன்மையுடன், கலாச்சாரம் மாறாமலும் வாழ்வதற்கு வழிவகுத்து தந்த ஒரு மகத்துவம் பொருந்திய மகானின் வாழ்க்கை சரிதத்தின் சுருக்கமே இந்த நூல்.

பிறப்பிலிருந்து, இப்பூவுலகில் வாழ்ந்ததிலிருந்து, இவ்வுடலை நீத்தது வரையும், அதி அற்புதமான தியாக வாழ்வு. இப்பூவுலகை விட்டு மறைந்த பின்பும் புத்திக்கு விளங்காத புதிரான வாழ்வு. எண்ணி எண்ணி வியந்தாலும் அற்புதங்களை அளவிடமுடியாது. பலன் அடைந்தவர்களின் வாயிலிருந்து கேட்டால் எழுதுவதற்கு பக்கங்கள் போதாது. அனுபவித்தவன் நான், அதை நான் விவரிக்க முடியாது. இறைவா உன் ரகசியத்தை சற்று, விளங்கிக் கொண்டேன் என்று படையெடுத்து வந்து சென்ற ஞானியர்கள், என் தேசப்பிரச்சனைக்கு விடை தெரிந்து விட்டது என்று பிறருக்கு தலை சாயாத மன்னர்கள்! தலை சாய்ந்து, நன்றி பகர்ந்த வரலாறு. எனக்கு எந்த வழியும் தெரியவில்லை. உங்களை விட்டால் எனக்கு எந்த கதியும் இல்லை என்று புலம்பி வாழ்க்கைக்கு ஒளியும், வழியும் தீர்வும் பெற்று செல்லும் சராசரி மனிதர்கள். வங்கக்கடலின் அலை இரைச்சலைவிட மனதில் குறையோடும், நிறையுடனும் வந்தும், சென்றும் கொண்டிருக்கும் மனித இரைச்சல் அதிகம். குத்புல் அக்தாப், குத்துபுல் மஜீது, செய்யிது ஷாதாத் செய்யிது அப்துல் காதிர், ஷாஹுல் ஹமீது மீரான் சாகிபு, கஞ்சஸவாயி, கஞ்சபக்ஷ்,

வலிய்யுல் அஃலம் அவர்களின் திருச்சன்னதியின் உள்ளும் புறமும் தான் இத்தனை நிகழ்வுகள். தமிழக முஸ்லிம்களால், எஜமான் என்ற வாஞ்சையான சொல்லுக்கு அதிபதி. பெயர் கூறிய மாத்திரம் சப்த நாடிகளும் ஒடுங்கி, உடல் குறுகி, ஆனால் முகம் நிறைந்த மலர்ச்சியோடு உலவும் ஆஷிகீன்களையும், பிறமத சகோதரர்களையும் சற்று உற்று நோக்கினால்! நம் மனதிற்குள் ஆயிரம் கேள்விகள் எழும். இவர்கள் அப்படி எதைக் கண்டு இப்படி மரியாதை செலுத்துகிறார்கள்? என்ற கேள்வியும், அதற்கான காரணங்களையும் ஆராய்ந்தால் அதன் சிந்தனை விளைவு முடியுறாமல் போய் கொண்டேயிருக்கும். அத்தகைய அற்புதமான வாழ்வு இந்த மகானின் தியாக வாழ்வு. சிறு வயதிலிருந்து இந்த தர்பாருக்கு வந்து செல்லும் எனக்கு, என் தேவைகள் மட்டுமே முக்கியம். பள்ளி பரிட்சையில் பாஸ் செய்வதிலிருந்து. நண்பர்களின் உடக்கு, தீர்வுக்கும், வயது வந்த பின்பு அயல் நாடு செல்லவும், பின்பு நல்ல மனைவி அமையவும் கையேந்தி கேட்டு, அத்தனையும் பெற்று சந்தோஷம் நிறை வாழ்வு. இதுதான் 22 வயது வரை என் எஜமானைப் பற்றிய அறிவு. இன்றும் எந்தப் பிரச்சனையானாலும் ஓடி வந்து கையேந்தும் நிலை. இது மாறவும் மாறாது. மாற்றவும் முடியாது. அது உயிரோடு கலந்து விட்ட நிலை. எஜமானின் வாழ்வை பற்றியும் அவர்களின் மகிமை பற்றியும் தெரிந்தது எல்லாம் தலைமுறை தலைமுறையாய் கேட்டவர்களும், அனுபவித்தவர்களும் தொகுத்த கன்ஜுல் கராமத் என்ற பெரும் நூல் மூலமாக அறிந்ததுதான். கடந்த வருடம் ஒரு நாள் பகல் நேரம், தர்பாரில் நான் இருந்த போது ஒரு ஆங்கிலேய தம்பதி உள்ளே வந்து

எஜமானின் வாயிலை தரிசித்து விட்டு, அவர்களை பற்றி அறிய வேண்டி கேட்ட போது ஒருவருமே சரியான விளக்கம் தராமல் போக, அவர்கள் திருப்தியடையாமல் இருந்ததை கண்டு என் மனம் மிகவும் வருத்தமடைந்தது. இந்த நிகழ்வை என் மரியாதைக்குரிய என் தந்தையை போன்றவர், தர்கா ஆலோசனைக்குழு உறுப்பினர் ஹாஜி. M.Y. சுல்தான் கபீர் சாஹிப் காதிரி அவர்களிடம் தெரிவித்த போது அவர்களும் அதை கேட்டு வருத்தமுற்றார்கள். மேலும் ஒன்றை அறிவுறுத்தினார்கள்.

இது என் மனதில் மிகவும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அங்கிருந்து வீடு திரும்பியவுடன், இதே சிந்தனையில் இருந்த நான், வேறு வழி தெரியாது எஜமானிடமே முறையிட்டு சில ஆய்வுகள் செய்தேன். அன்றிலிருந்து தோண்ட, தோண்ட அற்புதம், அதிசயம், எவ்வளவோ வியப்புக்கள். இன்று நாம் மானமுடனும், மார்க்க நெறியுடனும் வாழ்வதற்கு காரணமே அவர்கள் தான் என அறிந்தபோது வியப்பிற்கு அளவே இல்லை. எத்தனையோ அறிஞர்கள் எஜமானை பற்றிய நூல்கள் எழுதியுள்ளார்கள். குறிப்பாக மரியாதைக்குரிய அண்ணன், ஹைதர் அலி, பேராசிரியர் நாகூர் ரூமி, நாவலர் யூசுப் மற்றும் பல அறிஞர்கள் பல நூல்கள் எழுதியுள்ளனர். இருப்பினும், இன்றைய காலம் வேகமானது, விரைவானது. நூறு பக்கம் உள்ள நூலை படிக்க ஆர்வமுள்ளவர்கள் ஒரு சிலரே. எனவே சுருக்கமாக ஆனால் கருத்து பொதிந்த நூல் ஒன்றை வெளிக் கொணர முடிவு செய்தேன். இதை என் அன்புக்குரிய என் தந்தைக்கு நிகரான நாகூர் எஜமான் வழித்தோன்றல்களின் வாரிசாகிய ஹாஜி. M.Y. சுல்தான் கபீர் சாஹிப் காதிரி அவர்களிடம் தெரிவித்த போது, முயற்சி செய்யுங்கள், வெற்றி அடைவீர்கள் என்று எஜமானின் தர்பாரில் ஆசீர்வதித்து அனுமதி தந்தார்கள். அதை எஜமானின் அனுமதியாகவே எடுத்து, செயலில் இறங்கி, தகவல்களை சேகரிக்க ஆரம்பித்தேன்.

சிலர் அன்புடன் தகவல் அடங்கிய நூல்களை அளித்தனர். சிலர் தேவையில்லாத வேலை என சலிப்படைந்தனர். ஒரு அன்பர் குணங்குடி அப்பா எழுதிய பாடல் வரி ஒன்றுக்கு விளக்கம் தர முடியுமா ? என தன் மேதாவித்தனத்தை என்னிடம் கேள்வியாக எழுப்பி, சந்தோசமடைந்தார். இருப்பினும் என் மனைவி மற்றும் நண்பர்கள், அளித்த அதீதமான ஊக்கமும் தகவல்களும் என்னை உற்சாகப்படுத்தி வந்தன. நான் பணிபுரிவது துபை நாட்டில் நேரம் கடந்த நள்ளிரவு வேலை நேரங்கள். இருப்பினும் நான் இப்பணியினை தொடங்கிய போது எனக்கு எல்லாமே சுலபமாகவும், சுமுகமாகவும் இருந்தது.

மேலும் இந்த நூல் சுருக்கமான முறையில் தாய்மொழி தமிழிலும், ஆங்கிலத்திலும் அமைய வேண்டும் என்பதால் கிடைத்த தகவல்களில் எதை விடுப்பது எதை சேர்ப்பது என்பது தான் பெரும் பிரச்சனையாகிவிட்டது, இருப்பினும் இதில் எஜமானின் தியாக வாழ்வு, மனித குலத்திற்கு அவர்கள் செய்த அறிய சேவை. குறிப்பாக, தமிழக, கேரள மக்களுக்கு அவர்கள் ஆற்றிய அரும் பணிகள் என்ற வட்டத்திற்குள் மட்டுமே உள்ளது. அவர்களின் அருள் வாழ்வின் மறு பகுதியான கராமத் (அற்புதங்கள்) என்ற கடலில் இறங்கிவிட்டால், இது போல் ஆயிரம் பக்கங்கள் எழுதினாலும் நூலை நிறைவு செய்ய முடியாது என்பதை, அறிந்தவர்களும், எஜமானின் ஆஷிக்கீன்களும் நன்கு உணர்வார்கள். எனவே, இந்த நூல் எஜமானை பற்றிய முழு விபரம் தெரியாத புதியவர்களுக்கும், அறிந்த பக்தர்கள் மற்றும் ஆஷிக்கீன்களுக்கு புதிய தகவல்களை தருவதற்கும், உரிய வகையில் மிகச்சிறிய அளவிலேயே ஆக்கியுள்ளேன். இந்தக்காலம் மிகவும் கடினமானது. காரணம், எதற்கெடுத்தாலும் ஆதாரம் கேட்கும் சில சேதாரங்கள்.

உலாவரும் காலம். எனவே கவனமுடன் ஆராய்ந்து ஆதாரத்துடன் எழுதப்பட்ட நூல் இது. மேலும், முனைவர்கள் எழுதிய, குறிப்பாக அண்ணன் ஹைதர் அலி, நாகூர் ரூமி, நாவலர் யூசுப் போன்றவர்கள் எழுதிய அரும் நூல்களிலிருந்து சில தகவல்களும், குஞ்சாலி மரைக்காயர் பற்றிய அரிய தகவல்களை காமில் ஷைகு தைக்கா ஷுஐபு ஆலிம் அவர்களின் நூலிலிருந்தும், Dr. P.M. அஜ்மல்கான் அவர்களின் ஆய்வு கட்டுரையிலிருந்தும் எடுத்து, இதில் சேர்த்துள்ளேன். மரியாதைக்குரிய மேற்கூறிய பெரியோர்கள் அன்புடன் இதை அனுமதிப்பார்கள் என்ற நம்பிக்கையில் இதை செய்துள்ளேன்.

மேலும் எனக்கு அரிய பல தகவல்களை அளித்து உதவிய கேரளாவை சேர்ந்த என் நண்பர்களுக்கும், கடலூர் ஆஷிக் அப்துல் ரஹ்மான் அவர்களுக்கும், என் ஆருயிர் நண்பர் மதுக்கூர் A.S.M. ஜாஹிர் ஹுசைன் அவர்களுக்கும், இந்நூல் உருவாகும் காலம் முதல் தட்டச்சு, பிழை திருத்தம் செய்து, தன் அலுவலக பணிகளுக்கு இடையே, அன்பு மனதுடன் எனக்கு உதவிய அண்ணன் மதுக்கூர் ஆதம் A. அப்துல் குத்தூஸ் அவர்களுக்கும், என் அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய எஜமானின் பேரர், ஆன்மீக தந்தை தர்ஹா ஆலோசனை கமிட்டி உறுப்பினர் ஹாஜி. M.Y. சுல்தான் கபீர் சாஹிப் காதிரி அவர்களுக்கும், அவர்தம் அன்பு மகனார் ஹாஜா ஹமீதுல் ஆஷிகின் சாஹிப் அவர்களுக்கும், இந்நூல் குறிப்பிட்ட காலத்திற்குள் வெளிவர காலநேரம் பாராமல் உதவிய M.Y.S. முஹம்மது யாகூப் சாஹிப் (நஜீப்) அவர்களுக்கும், மற்றும் எனக்கு அரிய பல தகவல்கள் அளித்து உதவிய நண்பர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கி கொள்கிறேன். வாசகர்களாகிய உங்கள் நல்லிதய விமர்சனங்களையும்,

உங்களிடமுள்ள அரிய தகவல்களையும் எனக்கு தெரியப்படுத்துவீர்களாயின், அவைகள் அடுத்த பதிப்பில் பதிக்கப்படும். அந்த நற்செயலுக்கான பலனை எஜமான் உங்களுக்கும் அளிப்பார்கள் என்ற "துஆ" வுடன், என் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

M.J. ரியாஜ் அலி
BAITH-AI-KHADER
அடியக்கமங்கலம் – 611 101.
23.05.2010

திக்கு திகந்தமும் கொண்டாடியே வந்து
தீன் கூறி நிற்பர் கோடி
சிம்மாசனாதிபர்கள் நஜரேந்தியே வந்து
ஜெய ஜெயா வெண்பர் கோடி
ஹக்கனருள் பெற்ற பெரியோர்கள் வலிமார்கள்
அணியணியாய் நிற்பர் கோடி
அஞ்ஞான வேறறுத்திட்ட மெஞ்ஞானிகள்
அனைந்தருகில் நிற்பர் கோடி
மக்க நகராளும் முஹம்மதுர்றசூல் தந்த
மன்னரே வெண்பர் கோடி
வசனித்து நிற்கவே கொலு வீற்றிருக்கும்
உம் மகிமை சொல வாயுமுண்டோ
தக்க பெரியோனருள் தங்கியே நிற்கின்ற
தவராஜ செம்மேருவே
தயவுவைத்தெனையாளும் சற்குணங்குடி கொண்ட
ஷாஹுல் ஹமீதரசரே!

மேலே உள்ள பாடலை ஒருமுறைக்கு இருமுறை படித்து, பாடிப்பாருங்கள். இப்புகழ்ச்சிக்கு உரிய நாயகர் எத்தனை மகிமை பொருந்தியவர் என்று அறிஞர்களுக்கும், சராசரி தமிழறிந்த மக்களுக்கும் நன்றாக பொருள் புரியும். இந்த பாடலை பாடிய குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் இந்த நாயகர் மறைந்து ஏறத்தாழ 325 ஆண்டுகளுக்கு பின்பு பாடிய பாடல். ஆனால் பாடலோ தன்முன் ராஜ தர்பாரில் மன்னாதி மன்னராக அமர்ந்திருக்கும் நாயகரை கண்ணார கண்டு பாடிய பாடலாகவே தெரியும். இப்படி உடல் மறைத்தும் அறிஞர், ஞானியர் கண்களுக்கு அழகாய் காட்சியளிக்கும், இத்தனைப் புகழுக்கும் பெருமைக்கும் உரிய நம் நாயகர், தமிழ் மக்களால் எஜமான் என்றும், நாகூர் ஆண்டவர் என்றும்,

ஜாதி, மத பேதமின்றி அன்போடு அழைக்கும் பாதுஷா நாயகம் அவர்கள், ஏறத்தாழ 510 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் வடக்கே உத்திர பிரதேச மாநிலம் அயோத்தி அருகே மாணிக்கப்பூர் என்ற ஊரில் ஹிஜ்ரி 910 ம் வருடம் (ஆங்கில வருடம் 1491) ஜமாத்துல் ஆகிர் 10ம் நாள் இவ்வுலகில் உதித்தார்கள். குலத்தாலும், குணத்தாலும் உயர்ந்த நம் நாயகரின் தந்தையார் செய்யிது ஹசன் குத்தூஸ், பெருமானாரின் 22ம் தலைமுறை வழியை கொண்டவர்கள். மங்கையர் திலகம் மாதரசி செய்யிதா பீபி பாத்திமா அவர்கள் நம் நாயகரின் அருமை தாயார். பெருமானார் நபி (ஸல்) அவர்களின் 26வது தலைமுறை வழியை சேர்ந்தவர்கள். தாய் தந்தை இருவழியிலும், பெருமானார் வழியை பெற்று செய்யிது சாதாத் செய்யிது என்ற அந்தஸ்திற்கு உட்பட்டவர்கள். நாயகம் அவர்களுக்கு அன்னை தந்தையர் சூட்டிய அழகு பெயர், செய்யிது அப்துல் காதிர். பிறந்தது முதல் இவ்வுலகில் வாழ்ந்து உடல் மறைந்த காலம் வரை தியாக வாழ்வு. இம்மனித சமுதாயத்தின் மீது அளவு கடந்த அன்பினாலும், கருணையாலும் கராமத் என்ற இயற்கை அற்புத நிகழ்வுகள், அவர்களின் வாய் அசைவு, செயல் சைக்கினை மூலம் நடந்து கொண்டே இருந்தது. அது இன்றளவும் நடந்து கொண்டே உள்ளது.

சிறு குழந்தையிலேயே பால்குடியாமல் ரமலான் நோன்பு பிறையை தாயாருக்கு உணர்த்தியது, கொள்ளையிட வந்த கள்வர்களை விரட்டியது போன்ற கராமத்துக்கள் பாலர் பருவத்தில், நடந்தேறியதை கண்ட ஊர் மக்கள், குழந்தை அவர்கள் மீது அளவு கடந்த நேசம் கொண்டிருந்தனர். அதற்கு அவர்களின் குடும்ப பாரம்பரியமும் ஒரு காரணமாக இருந்ததை உதாரணமாக கொள்ளலாம். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்த பாலர் அப்துல் காதிர் தம்

எட்டாம் வயதிலேயே திருக்குர்ஆனை ஓதி முடித்து மனனம் செய்திருந்தார்கள். மேலும் வரலாறுகளை ஆய்வு செய்து பார்க்கும் பொழுது எஜமானின் தாய்மொழி பார்சி மொழியாக இருந்துள்ளது. சிறுவயதிலேயே அரபி இலக்கணம், பிக்ஹ், தசவுப் போன்ற அனைத்து மார்க்கக் கல்வியையும், கலையினையும் திறம்பட கற்று தேர்ந்த எஜமான், அவற்றில் திருப்தி அடையாமல் ஆன்மீக தேடலில் இறங்கினார்கள். தனது பதினெட்டாம் வயதில் தனது ஊருக்கு வெகுதூரமுள்ள குவாலியர் நகரில் பேரும் புகழும் பெற்ற ஷெய்கு முஹம்மது கவுஸ் குவாலியரி அவர்களிடம் சேர்ந்து ஆன்மீக ரகசிய பயிற்சிகளை பெற்று வந்தார்கள். 28 வயது வரை ஏறத்தாழ பத்து ஆண்டுகள் குருவிடம் ஆன்மீக பயிற்சி பெற்று தேர்ந்தார்கள். புடம் போட்ட தங்கமாக எஜமானை மெருகேற்றினார்கள். ஷெய்கு முஹம்மது கவுஸ் குவாலியரி அவர்கள், தன் மாணாக்கர் மீது அளவு கடந்த அன்பை வைத்திருந்த அவர்கள், அவர்களை அன்பு கமழ " யா ஷாகுல் ஹமீத் " (அரசர்க்கு அரசர்) என்றே அழைப்பார்கள். அந்த அழகு திருப்பெயரே அவர்களுக்கு நிரந்தரமாக அமைந்து விட்டது. மக்களும் மன்னர்களும் அவர்களை ஷாகுல் ஹமீத் என்றே அழைத்தனர். பத்து ஆண்டுகளுக்கு பிறகு தன் குருவிடம் விடைப் பெற்று கிளம்பும் பொழுது, தன் மகளை மணமுடித்து கொள்ளுமாறு அன்பு குருநாதர் அவர்கள் வேண்டிக் கொள்ள, அன்போடு மறுத்து விட்டார்கள். தனக்கு திருமண நாட்டம் இல்லை என்பதை தெரியப்படுத்திய அவர்கள், தான் உலகம் முழுவதும் சென்று இறைப்பணி செய்யவே விரும்புவதாகவும் தெரிவித்தார்கள். இருப்பினும் குருநாதர் அவர்கள் உங்களுடைய தக்தீரில் (இறை விதி) உங்களுக்கு குழந்தை பாக்கியம் உள்ளதே அதை எப்படி வெளிப்படுத்துவீர்கள் என்று கேட்க, அது நிச்சயம் வெளிப்படும் திருமணம்

இல்லாமலேயே! என்று கூறினார்கள். ஷெய்கு அவர்களும் எஜமானுக்காக பிரார்த்தித்து அவர்களை அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள்.

தன்னுடன் இருந்த சில சக மாணவர்கள் புடை சூழ மாணிக்கப்பூர் சென்று தாய் தந்தையரை கண்ட எஜமான் அவர்கள், சில நாட்கள் தாய் தந்தையருடனேயே இருந்தார்கள். பெற்ற மனங்கள் பிள்ளைகள் மணமுடித்து மகிழ நாடி எஜமானிடம் தெரிவித்த போது அதை அன்போடு மறுத்து விட்டார்கள். தன்னுடைய நாட்டமான இறைப்பணியை செய்யவே விரும்புவதாக பெற்றோர்களிடம் தெரிவித்த பொழுது, பதரி மறுத்த பெற்றோர்கள் எஜமானுக்கு திருமணம் செய்து வைக்க நாடி, அதற்கான முயற்சியில் இறங்கினர். இதனையறிந்த எஜமான் அவர்கள் தன் வீட்டிற்கு முன் இருந்த மணப்பந்தலை தன் கண் பார்வையாலேயே எரித்து கருக்கினார்கள். மீண்டும் தன் நோக்கத்தை பெற்றோர்களிடம் சொல்ல, அவர்களும் அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள். இவர்களின் அருமை, பெருமை உணர்ந்து அநேகப்பேர்கள் அவர்களுடன் சேர்ந்து புறப்பட்டு, வழியெங்கும் மார்க்க பிரசங்கம் செய்தும், மக்களுக்கு நல் உபதேசம் புரிந்தும், இந்தியாவின் மேற்கு நோக்கி சென்றார்கள். வழியில் லாகூர் (பாகிஸ்தான்) சென்ற அவர்களை அந்நகர நீதிபதி காஸி ஹசரத் நூருத்தீன் சாகிபு அவர்கள், அவர்களை அன்போடு வரவேற்று உபசரித்து தன் இல்லத்தில் இருக்க செய்தார்கள்.

பின்பு எஜமானிடம் தன் நீண்ட நாள் மனக்குறையான பிள்ளை இல்லா குறையை தெரிவிக்க, அவர்களும் இறைவனிடம் பிரார்த்தித்து, சில தவமுறை பிரார்த்தனைகள் மூலம் வெற்றிலையை தந்து இதை உண்டு மனைவியும் உண்டால் தங்களின் குறை நீங்கும் என்று அருளினார்கள்.

அத்துடன் தங்களுக்கு பிறக்கும் முதல் குழந்தை என்னுடையது என்றும் அதற்கு முஹம்மது யூசுப் என்று பெயர் சூட்ட வேண்டும் என்றும் அறிவுறுத்தி, குழந்தை ஏழு வயது கடந்ததும், என்னைப் பற்றி வினவும் பொழுது, அதை என்னிடம் விட்டு விட வேண்டும் என்ற கட்டளையுடன் அங்கிருந்து கிளம்பினார்கள். அவர்கள் குறிப்பிட்டபடியே நம் அனைவராலும் சின்ன எஜமான் என்று அழைக்கப்படும். தாதா செய்யிது முஹம்மது யூசுப் சாகிபு நாயகம் அவர்கள் ஹிஜ்ரி 959ம் வருடம் ரஜபு 12ல் இவ்வுலகில் உதித்தார்கள். எஜமான் குறிப்பிட்டபடியே அவர்களுக்கு பெற்றோர்கள் முஹம்மது யூசுப் என்ற பெயரையே சூட்டினார்கள். இதற்கிடையே பலுசிஸ்தான், ஆப்கானிஸ்தான் வரை சென்று மார்க்கப்பணியில் ஈடுபட்ட நாயகம் அவர்கள் தன் ஞானதிருஷ்டியால் தனது தாயாரின் முடிவு காலம் நெருங்குவதை அறிந்து, வேகமாக மாணிக்கப்பூர் நோக்கி திரும்பினார்கள்.

அங்கு தன் தாயுடன் சில காலம் இருந்த அவர்கள் தன் அன்னையின் முடிவு காலம் அடைந்த பிறகு, அனைத்து காரியங்களும் செய்த நாயகம் அவர்கள் அங்கிருந்து மீண்டும் இந்தியாவின் பலபகுதிகளுக்கும் சென்று மார்க்க மனிதநெறி பிரச்சாரத்தை தொடர்ந்தார்கள். வரலாற்று ஆய்வில் குஜராத் மகாராஷ்டிரம், கர்நாடகாவில் பீஜப்பூர், குல்பர்க்கா வரை வந்த நாயகம் அவர்கள் பின்பு மீண்டும் மேற்கு நோக்கி ஆப்கான், ஈரான், ஈராக் போன்ற நாடுகளில் பிரச்சாரப் பணியை மேற்கொண்டார்கள். இந்த கால கட்டத்தில்தான் முன்பே குறிப்பிட்ட தன் பிள்ளை முஹம்மது யூசுப் நாயகம் அவர்கள் ஏழு வயதை அடைந்ததும், தன் தாய், தந்தையிடம் எஜமானைப் பற்றி கேள்வி கேட்க தொடங்கி, நான் அவர்களின் பிள்ளை அவர்களிடமே செல்வேன் என்று அழுது புலம்ப, பெற்றவர்களும் வேறு வழியில்லாமல் குழந்தையை

தன் போக்கில் விட்டார்கள். குழந்தை யூசுப் நாயகம் தன்னை தேடி வருவதை அறிந்த நாயகம் அவர்கள் தன் சீடர்களை அனுப்பி குழந்தையை அழைத்து வரச் செய்து, தன்னுடனேயே இருத்தி, இவ்வுலகில் வாழ்ந்த காலம் வரை மார்க்க மனிதநேய கடமையை செய்து வந்தனர். இடையே ஹஜ் கடமையை நிறைவேற்ற, மக்கா சென்ற நாயகம் அவர்கள், தங்கள் திருப்பாட்டனாரின் இடத்திலேயே சில காலம் தங்கி வாழ்ந்தார்கள். பின்பு, அங்கிருந்து சிரியா, பாலஸ்தீனம், துருக்கி போன்ற நாடுகளுக்கு சென்று பிரச்சாரம் செய்த நாயகம் அவர்கள், மீண்டும் தன் பாட்டனார் முஹம்மது முஸ்தபா நாயகம் (ஸல்) அவர்களின் திரு மதினாவிற்கு திரும்பி, அவர்களின் ரவ்லாவை தரிசித்தார்கள். சில காலம் கழித்து தானும் தனது அன்பு மகனார் மற்றும் சீடர்கள் புடை சூழ கப்பலில் பயணம் மேற்கொண்டு, சில மாத கடின பயணத்திற்கு பின் தென் இந்தியாவின் கேரளப் பகுதியான பொன்னானியில் இறங்கினார்கள். இங்கிருந்துதான் அவர்களின் தெளிவான வரலாறும், அவர்களின் அரிய சேவையும் அறிஞர்களும், ஞானியர்களும் வியக்கும் வண்ணம் துவங்கியது.

அன்றைய கேரளா மற்றும் தமிழகத்தின் காயல்பட்டினம் துறைமுகங்கள் வாணிபத்திற்கு புகழ் பெற்ற தளமாக விளங்கியது. பாதுஷா நாயகம் அவர்கள். தன்னுடன் 404 சீடர்களுடன் பொன்னானியில் வந்து இறங்கியது 1530 அல்லது 1531ம்ஆண்டு நாயகம் தென்னகத்தில் குறிப்பாக, கேரளாவிற்கு வந்தபோது, அங்கு வாழ்ந்த முஸ்லீம்கள் மிகவும் செல்வாக்குடனும், செல்வ செழிப்புடனும் வாழ்ந்து வந்ததை வரலாறு நன்றாக தெரியப்படுத்துகிறது. கோழிக்கோடை (Callicut) ஆண்ட ஜாமரின் அரசரின் அரசவையில் முஸ்லிம்கள் பலர் உயர் பதவிகளில் இருந்து

அரண்மனையை அலங்கரித்துள்ளனர். இதற்கு காரணம் எஜமான் அப்பகுதிக்கு வரும் பல ஆண்டுகளுக்கு முன்பே அரேபியர்கள் தங்களின் முக்கிய வாணிப தடமாக கேரளாவையும், தமிழகத்தின் காயல்பட்டினத்தையும் முக்கிய தளமாக பயன்படுத்தினர். பல அரேபிய வாணிபர்கள், இங்கேயே திருமணம் செய்து நிலையாகவும் வாழ்ந்து வந்தனர். அரேபியர்களின் வாணிப தடத்தையும், செல்வங்களையும் மோப்பம் பிடித்த போர்த்து கீசிய மாலுமி வாஸ்கோடகாமா 1498ம் ஆண்டு, கோழிகோடு (Calicut) அருகே, கப்பாடு என்ற இடத்தில் தான் முதலில் கரையிறங்கினான். வாணிபம் மட்டுமே தனது நோக்கம் என்று கூறி கால் பதித்த அவனை, கடல் வாணிபத்தில் கொடிக்கட்டி பறந்த முஸ்லிம்கள் அவனின் தீய நோக்கமறிந்து, அங்கிருந்து விரட்டி அடித்தனர். இருப்பினும், செல்வ நிலைகளை கண்டு திகைத்த வாஸ்கோடகாமா இங்கேயே நிலையாக கால்பதிக்கும் குறியோடு அடிக்கடி போர் செய்தான். அவனின் கடல் போர் முறைகளை கண்டு கலங்கிய கோழிக்கோடு அரசன் சாமுத்திரி திகைத்து நின்ற போது, அந்நியர்களை ஒரு போதும் இம்மண்ணில் அனுமதிக்க முடியாது என்று அறை கூவி, அவர்களுடன் போர் செய்தார், மாவீரர் குஞ்சாலி மரைக்காயர். இவர் ஜாமரின் அரசனின் படை தளபதி. கடற்பரை பற்றிய அறிவு எந்த இந்திய மன்னர்களுக்கும் இல்லாத நேரத்தில் திட்டமிட்டு செயல்பட்டு போர்த்துகீசிய படையை கதிகலங்க அடித்து அங்கிருந்து விரட்டினார் குஞ்சாலி மரைக்காயர். வேறு வழியின்றி வாஸ்கோடகாமாவும் அவனது படைகளும் வடக்கு நோக்கி நகர்ந்து மக்கள் அரவம் இல்லாத இன்றைய கோவா பகுதியில் 1510ம் ஆண்டு வணிகக்கூட்டம் போல் இறங்கி, அந்த பகுதியை கைப்பற்றினான்.

அவனது எண்ணம் முழுவதும் தென்திசையில் கிழக்கிலும், மேற்கிலும் உள்ள அதாவது தமிழகம் மற்றும் கேரளாவில் உள்ள அனைத்து சிறிய பெரிய துறை முகங்களிலும் முஸ்லிம்களும், அரேபியர்களுமே வாணிபம் செய்து வந்தனர். அதை முறியடித்து அதை போர்த்துகீசிய வாணிப தளமாகவும் அரேபியர்களின் வருகையை ஒழிக்க வேண்டும் என்பது மட்டுமே வாஸ்கோடகாமாவின் முக்கிய குறியாக இருந்தது. ஏறத்தாழ 10 ஆண்டுகள் போர்த்துகீசிய அரசின் உதவியோடு நிறைய படைகளையும், நாவாய்களையும் சேர்த்து ஒரு பெரும் போருக்கு திட்டம் தீட்டி, அதன் முக்கிய தளபதியாக மார்டின்–டி–ஸோஸா என்பவனின் தலைமையில் கேரளாவை நோக்கி படையெடுக்கச் செய்தான். இந்த படையெடுப்பை வெற்றிகரமாக முறியடித்து, வந்த வழியே ஓடச் செய்தார் குஞ்சாலி மரைக்காயர். போர்த்துகீசிய படைகளுக்கு எதிராக போரிட ஏறத்தாழ 200 நாவாய் கப்பல்கள் வரை வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது. இவைகளை முறையே அஹ்மது மரைக்காயர், குஞ்சாலி மரைக்காயர், முகம்மதலி மரைக்காயர், குட்டி அலி மரைக்காயர் போன்ற வீரர்களின் வழிகாட்டுதலுடன், சிறிய மற்றும் பெரிய போர்களை வெற்றி கண்டு போர்த்துகீசியப் படைகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார்கள்.

இந்த காலக்கட்டத்தில் தான் எஜமான் பாதுஷா நாயகம் இப்பகுதிக்கு அரேபியாவிலிருந்து வந்து இறங்கினார்கள். கேரளாவில் முஸ்லிம்களின் நிலை, அவர்களின் வாணிபமுறை அரேபிய வாணியர்கள் வருகை, இவைகளை கண்டு மனம் மகிழ்ந்த எஜமான், அம்மக்களுக்கு அருள் உபதேசம் செய்து வந்தார்கள். இந்த நேரத்தில் போர்த்துகீசிய போர் தொல்லைகளையும்

அவர்களின் வழக்க நெறிகளையும் கண்ட எஜமான் பாதுஷா நாயகம் தமது சீடர்களுடன் அருமை நண்பர் குஞ்சாலி மரைக்காயருடன் சேர்ந்து பல போர்களில் கலந்து கொண்டார்கள் என்ற வரலாற்று குறிப்பை படிக்கும் போது அவர்களின் தியாக உணர்வை எண்ணி எண்ணி மனது பெருமை கொள்கிறது. காரணம், சாது சூஃபியாகவே எஜமானைப் பற்றி அனைவரது அறிவுக்கும் தெரியும். அவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்த போது தான் அவர்களின் வீரமும் இந்த மனித சமுதாயத்திற்கு செய்த தியாகமும் விளங்க வருகிறது. எஜமானின் உபதேசத்தினாலும், உதவியாலும் மெய் உணர்ந்த குஞ்சாலி மரைக்காயர் அநேக இடங்களில் போர்த்துகீசியரை விரட்டி அடித்தார். குறிப்பாக 1538ல் தமிழகத்தின் தூத்துக்குடி பகுதியில் செல்வாக்கு செய்ய முயன்ற பரங்கிப்படையை, குஞ்சாலி மரைக்காயர் வெற்றிக் கொண்டு அங்கிருந்து விரட்டி அடித்தார். காயல்பட்டினம், ஷெய்கு சதக்கு மரைக்காயர் என்பவரும், பாதுஷா நாயகத்தின் சீடர்களுடன் சேர்ந்து, அநேகப் போரில் பரங்கியருக்கு எதிராக ஈடுபட்டுள்ளார்கள் என்பதை வரலாற்று குறிப்புக்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன. பரங்கியருக்கு எதிரான போரில் கொழும்புவில் நடந்த சண்டையில் குஞ்சாலி மரைக்காயர் இறந்து போனார்கள். இதையடுத்து அவரது குடும்பத்தில் இருந்து இரண்டாவது குஞ்சாலி மரைக்காயர் என்பவர் தொடர்ந்து இப்பணிகளை செய்து வந்துள்ளார்கள். இவர் அனைவருக்குமே பாதுஷா நாயகம் மிகவும் உதவிகரமாக இருந்துள்ளார்கள். இவைகளில் குறிப்பிடும் போர்கள் காயல்பட்டினம் போர், தூத்துக்குடி போர், வேதாளை போர், நாகப்பட்டினம் போர் போன்றவையாகும். குறிப்பாக நாகப்பட்டினம் போரில் குஞ்சாலி மரைக்காயர் 8000 பேருடன்

கலந்துக் கொண்டு அந்த பக்கமே பரங்கியரை தலையெடுக்க விடாமல் தடுத்த வரலாறு நம்மை பெருமையின் உச்சிக்கே சென்றடைய செய்கிறது. தமிழகத்தின் அநேக கடலோர பகுதிகளுக்கும் சென்ற எஜமான் பாதுஷா நாயகம், குறிப்பாக வர்த்தக மேம்பாட்டைப் பற்றியும், திருமணங்களை பற்றியும், குடும்ப வாழ்வு பற்றியும், அனைவருக்கும் அருள் உபதேசம் செய்து நல் வாழ்க்கை, ஆனந்த வாழ்க்கை வாழச் செய்தார்கள். திருமணமே செய்து கொள்ளாத நாயகம் மக்களிடம் திருமண உறவையும், அதன் அவசியத்தையும் உணர்த்தி அவைகளை அவர்களே நடத்தி வைத்த நிகழ்வுகளை நினைக்கும் போது, அவர்களின் கருணை உள்ளம் பற்றிய நினைவு நம்மை மெய் மறக்கச் செய்கிறது. கேரளாவிலிருந்து தென்காசி, காயல்பட்டினம், கீழக்கரை போன்ற இடங்களில் அவர்கள் சில நாட்கள் தங்கியிருந்து அனைத்து மக்களுக்கும் அருள் உபதேசம் செய்து வந்தார்கள். ஜாதி, மதமின்றி அனைத்து மக்களும் எஜமானிடம் வந்து அருள் பயன் பெற்று சென்றனர். அங்கிருந்து புறப்பட்ட எஜமான் பல ஊர்கள் கடந்து திருச்சிராப்பள்ளிக்கு வந்தடைந்தனர். சோழ மன்னர்களின் வீழ்ச்சிக்கு பிறகு, கண்டும் காணாமலும் இருந்தது இவ்வூர். இந்நிலையில், திருச்சிராப்பள்ளி வந்த எஜமான் அங்கு தமக்கு சிலநூறு ஆண்டுகள் முன்பே அடக்கமாகியிருந்த, நத்ஹர் வலி என்ற இறைநேசரின் அடக்கவிடம் அருகிலேயே இருந்து வந்தார்கள். சில நாட்கள் தவத்திலும் இருந்துள்ளார்கள். இங்கு இவர்களுக்கும், மாபெரும் இறைநேசர் நத்ஹர்வலி அவர்களுக்கும் ஆன்மீக ரீதியான சந்திப்பு நிகழ்ந்த நிகழ்ச்சியும் வரலாற்றில் உள்ளது. எஜமான் அவர்களுக்கு பாதுஷாக்களின் நாயகம் என்ற பட்டத்தையும் அவர்களே அளித்ததாகவும் கூறப்படுகிறது. அன்றிலிருந்து அவர்களை

மக்கள் அன்புடன் "பாதுஷா நாயகம்" என்று அன்பு பொங்க அழைத்தனர்.

எஜமான் திருச்சியில் இருந்த காலத்தில் அவர்களின் மகிமை பற்றிய செய்தி நாற்புறமும் பரவியது. இந்நிலையில் தஞ்சையை ஆட்சி செய்த நாயக்க மன்னர்களின் முக்கியமான அரசர் அச்சுதப்ப நாயக்கன், தனது எதிரிகளால் சூனியம் செய்யப்பட்டு, தீராத வியாதியுடன் அல்லல்பட்டு வந்தார். கைகால் விளங்காத நிலையில் மன்னர் இப்படியே இருந்து இறக்க வேண்டியதுதான் என்று அனைத்து வைத்தியர்களும் கைவிட்ட நிலையில் காலத்தை எண்ணிக் கொண்டிருந்தார் மன்னர். மன்னரின் குடும்பத்திற்கு எஜமானின் மகிமையை பற்றியும், அவர்களின் திருச்சி வருகை பற்றியும் தெரிவிக்கப்பட்டது. இதையறிந்த மன்னர் குடும்பத்தினர் பரிவார புடை சூழ திருச்சி சென்று எஜமான் பாதுஷா நாயகத்திடம் மன்னரின் நிலை பற்றி கூறி, தாங்கள் அவசியம் எங்களுடன் வந்து மன்னரை பார்க்குமாறு வேண்டி நின்றனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்ற நாயகம் அவர்கள் நீங்கள் அனைவரும் செல்லுங்கள். நாம் அவசியம் சில நாட்கள் கழித்து தஞ்சை வருவோம் என்று அன்புடன் கூறி அவர்களை அனுப்பி வைத்தனர்.

பின்பு சில நாட்கள் கழித்து திருச்சியை விட்டு கிளம்பிய எஜமான் நாயகம் அவர்கள் வழியில் பல மக்களுக்கும் அருள் உபதேசம் செய்து, தஞ்சையை சென்றடைந்த போது, பெரும் அரச மரியாதையுடன் வரவேற்று மன்னர் இடம் அழைத்து சென்றனர். அங்கு மன்னர் நோய் நிலை கண்ட எஜமான் மிகவும் மனம் இறங்கி, தன் ஞான சக்தியால் அதற்கான காரணம் அறிந்து தம் சீடர் ஒருவரிடம் இம்மாளிகை மாடத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு புறா ஒன்று இருக்கும். அதை பிடித்து வா என்று

உத்தரவிட்டார்கள். அப்படியே அந்த புறாவும் கொண்டு வரப்பட்டது. அதை கண்ட அனைவரும் திடுக்கிட்டனர். காரணம், அதன் உடல் முழுவதும் ஊசியினால் சொருகப்பட்டு இருந்தும், இறவாமல் இருந்தது. அந்த புறா எஜமான் முன்பு வைக்கப்பட்டபோது நாயகம் அவர்கள், அந்த புறாவின் உடலில் இருந்த ஒவ்வொரு ஊசியை உருவியபோது, மன்னர் ஒவ்வொரு அங்கமும் சுகம் பெற்று வந்தார். இறுதியில் அனைத்து ஊசியும் புறாவிலிருந்து எடுக்கப்பட்டு, புறாவை பறக்கச் செய்தார்கள். சிறகடித்து புறா வானில் பறந்தது. கீழே மன்னர் அச்சுதப்ப நாயக்கன், துள்ளி எழுந்து மன்னர்களுக்கெல்லாம் மன்னர் பாதுஷா நாயகம் அவர்களின் கால்களில் குப்புற வீழ்ந்து கிடந்தான். மன்னனை எழுப்பி வாழ்த்திய எஜமானிடம், தங்களுக்கு எதுவேண்டுமாயினும் எடுத்து கொள்ளுங்கள் என்று கைகட்டி நின்ற மன்னனிடம் எதுவும் வேண்டாம் என அன்புடன் மறுத்து கிளம்பிவிட்டார்கள். மன்னரின் குடும்பத்தினர் மீண்டும் ஒரு கோரிக்கை வைத்தனர்.

அது இதுவரையிலும் மன்னன் அச்சுதப்ப நாயக்கருக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்றும், அதை தீர்த்து வைக்கும் படியும் வேண்டி நின்றனர். அருளும், கருணையும் கொண்ட எஜமான் அவர்கள் நோயுற்ற மன்னனின் குடிப்புக்காக வைத்திருந்த துளசி கலந்த தண்ணீரில் ஓதி குடிக்க கொடுத்தனர். நீர் நினைப்பது போன்ற குழந்தை பாக்கியம் உனக்கு இறையருளால் உண்டு என்று வாழ்த்தி புறப்பட்டார்கள். பல காணிக்கைகளை எஜமானிடம் எடுத்துக் கொள்ள சொல்லி மன்னர் வற்புறுத்தவே, எஜமான் அவர்கள் மீண்டும் மறுத்து ஒன்று மட்டும் கேட்டார்கள். உனது எல்லைக்கு உட்பட்ட நாட்டில் ஒரு சிறிய அளவு நிலம் வேண்டும் என கோரிக்கை வைத்தார்கள். (அது தனது மறைவுக்கு பிறகு தனது பூத உடலை அடக்கம் செய்ய நிலம் மட்டும்)

அதிர்ச்சியடைந்த மன்னர், மன்னருக்கு மன்னா! இந்த நாட்டையே தாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று வேண்டி நின்றான். இது கன்ஜுல் கராமத் மற்றும் வாய்வழி, செவிவழி செய்தியாக பதியப்பட்ட அனைவருக்கும் தெரிந்த சத்திய வரலாறு.

ஆனால் எஜமான் தஞ்சை மன்னர் மற்றும் இலங்கை மன்னர் – மாயதுன்னே மற்றும் ஆங்காங்கே இருந்த சில குறுநில மன்னர்கள் இவர்கள் அனைவரிடமும் கேட்டுக் கொண்ட ஒரே விஷயம் அந்நிய சக்திகளை இந்த மண்ணில் கால் ஊன்ற செய்ய வேண்டாம். அதை அவசியம் தடுத்து நிறுத்த வேண்டும். தேவைப்படின் அந்த நேரத்தில் தங்களின் படை உதவிகள் வேண்டும் என்ற கோரிக்கைகள் தான். நினைக்கவே வியப்பாக உள்ளது. இங்கு இவர்கள் ஜாதி, மத, பேதம் பார்க்கவில்லை. கலாச்சாரத்தையும், இத்தமிழக மக்களின் பண்பாட்டினையும் காத்திட இதற்கு எந்த ஒரு சிதைவும் ஏற்படக்கூடாது என்று உறுதியான உணர்வுடன் இருந்து போராடி, வென்று நம்மை காத்து நம் கலாச்சாரத்தை பாதுகாத்து தந்தார்கள் என்பது தான் நாம் அவர்களை நினைத்து நினைத்து மகிழ வேண்டிய விஷயம். அதற்கு சிறந்த எடுத்துக் காட்டு தான் இன்றைய நாகூர் தர்ஹா. இங்கு ஜாதியில்லை, குல உயர்வு, தாழ்வு இல்லை. அனைவருமே அவர்களின் குழந்தையாக வந்து அருள் பெற்று செல்வதும், குறை நீங்கி செல்வதும் அன்றாடம் நாம் காணும் காட்சியாக உள்ளது. மேலும் தஞ்சையை விட்டு கிழக்கு நோக்கி பயணித்த எஜமான் வழியில் அநேக ஊர்களுக்கும் சென்று அருளாசி வழங்கி மக்களின் வாழ்வை தெளிவுப்படுத்தி சென்றார்கள்.

வழியில் கூத்தாநல்லூர் சென்ற எஜமானை அங்கிருந்த மக்கள் அனைவரும் மிகவும் அன்பு கொண்டு

வரவேற்று உபசரித்தனர். அங்கு சில முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வந்தனர். மக்கள் யாவரும் தங்களுடைய நிலங்களில் விவசாயம் செய்து நிலங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வந்தனர். இதை கண்ட எஜமான் அவர்கள் அப்படி இல்லாது ஒருவருக்கொருவர் நெருக்கமாக வீடு அமைத்து வாழும்படியும், திருமண வாழ்வை மேம்படுத்திக் கொள்ளும்படியும் அறிவுரை செய்தனர். அந்த ஏழை மக்களின் அன்பு உபசரிப்பில் மிகவும் மனம் மகிழ்ந்த எஜமான் அவர்கள் அந்த மக்களுக்காக இறைவனிடம் மிகவும் பிரார்த்தனை செய்தனர். பிறகு அங்கிருந்து, பொதக்குடி மற்றும் சில கிராமங்களுக்கு சென்று திருவாரூர் வந்த நாயகம் அவர்கள், அருகே உள்ள கொடிக்கால்பாளையத்தில் சில நாட்கள் தங்கியிருந்தனர். இந்த நேரத்தில் திருவாரூர் பெரிய கோவில் தேர் உற்சவ நிகழ்ச்சியில் கோவில் சன்னிதியில் இருந்த தேரை ஆயிரக்கணக்கான மக்கள் இழுக்க முற்பட்ட போதும் தேர் நகரவில்லை. கவலையுற்ற மக்களும் அதிகாரிகளும் எஜமான் வருகை பற்றி கேள்வியுற்று அவர்களிடம் சென்று கோரிக்கை வைத்தனர். அவர்கள் அங்கு ஜாதி காணவில்லை, மதம் காணவில்லை மக்களின் நம்பிக்கையை மதித்து அவர்களுடன் சென்று தேரின் மீது கை வைத்து நகர உத்தரவிட்ட போது பத்து ஆயிரம் டன்னுக்கும் அதிக எடையுள்ள அந்த தேர் அதிர்ந்து குலுங்கி மக்களின் இழுப்புக்கு வசியமடைந்து ஊர் சுற்றி நிலையடைந்தது. திருவிழா காணவந்த லட்சோப லட்சம் மக்களில் சிலர் முஸ்லிம்களாகவும், பலர் பக்தர்களாகவும் மாறி நின்றனர். அது இன்றும் தொடங்குகிறது. நாளையும் தொடரும். இங்கிருந்து, அடியக்கமங்கலம், கூத்தூர், ஆழியூர் வழியாக மேலை நாகூர் போன்ற ஊர்களில் எல்லாம் சில

நாட்கள் தங்கி, இவ்வூர் மக்களுக்கும், இந்த ஊர்களுக்கும் துஆ செய்தார்கள். குறிப்பாக எனது ஊரான அடியக்கமங்கலத்தில் அடங்கியுள்ள பாவா பஹ்ருத்தீன் வலியுல்லா அவர்களின் அடக்கவிடத்தை எஜமான் தரிசித்து துஆ செய்து சென்றதாக வழிவழி பெரியோர்கள் செய்தியாக வைத்துள்ளனர்.

இன்றளவும் நான் குறிப்பிட்ட ஊர்களில் நடக்கும் நற்காரியங்களின் பிரார்த்தனையில் எஜமான் அவர்களின் பெயர் குறிப்பிடாத எந்த துஆவும் இருந்ததில்லை. இறுதியாக நாகூர் வந்தடைந்த எஜமான் அவர்கள் இங்கேயே இருப்பிடத்தை அமைத்து தங்கினார்கள். நாவல் காடுகளும், புதர்களும் அமைந்த இடத்தில் சரிசெய்து தன் ஆன்மீக தவப்பணியை செய்தார்கள். நாகூர் வந்தடைந்த பொழுது, அவர்களின் வயது நாற்பது அல்லது நாற்பத்தி ஒன்று. எஜமான் அவர்கள் சில நாட்களுக்கு பிறகு இங்கிருந்து புறப்பட எண்ணிய பொழுது தங்களது குருநாதர் அவர்கள் தமிழகத்தின் அவலநிலைக் கண்டு அங்கேயே இருந்து பணிகளை செய்யுமாறு கட்டளை இட்டதாகவும் கூறப்படுகிறது. அன்று முதல் நாகூரிலேயே தங்கிவிட்ட எஜமான், இங்கிருந்து பல ஊர்களுக்கும் பல நாடுகளுக்கும் சென்று மார்க்கப் பணியும், மனிதநேயப் பணியும் செய்துள்ளார்கள். குறிப்பாக, இலங்கை, பர்மா, அச்சை (இந்தோனேஷியா) மாலத்தீவு போன்ற நாடுகளுக்கு சென்று இஸ்லாம் பற்றிய அறிவு போதித்து மக்களை அணி அணியாக மார்க்கம் தழுவச் செய்தார்கள். இறை அறிவு இல்லாத மாற்று மத மக்களுக்கு அதன் அவசியத்தை போதித்து அப்படியே இருந்து அறவாழ்வு, நடத்தவும் போதித்தனர். அவர்களின் எண்ணம் முழுவதும் தமிழக கேரளா கடலோர பகுதிகளில் ஆட்சி செய்ய முயன்ற போர்த்துகீசிய மற்றும்

டச்சுக்காரர்களை விரட்டி, இப்பகுதி முழுவதும் நம் மக்களாலேயே வாணிபம் சிறப்புற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஆழமாக இருந்துள்ளதை அவர்களின் இந்த பணிகள் மூலம் நாம் அறிந்துக் கொள்ளலாம். தமிழகத்தின் கப்பல் வாணிபத்தில் முஸ்லிம்கள் மட்டுமல்லாது, இந்து வணிகர்களும் குறிப்பாக செட்டியார்கள் அதிகளவில் ஈடுபட்டு இருந்தார்கள் என்பதும் வரலாற்று பதிவில் உள்ளது. நாகை துறைமுகம் இதில் தலை சிறந்து விளங்கியது. மலேயா, பாலி போன்ற நாடுகளுடன் நேரடி வியாபார தொடர்பு இங்கு இருந்துள்ளது. நாகை துறைமுகத்தை பிடிக்க முயன்ற டச்சுக்காரர்களுடனும், பின்பு போர்த்துகீசியர்களுடனும் சிறு மற்றும் பெரிய போர்களை அனைத்து சமுதாய மக்களும் ஒன்று சேர்ந்து நடத்தி பலமுறை முறியடித்துள்ளனர்.

அதில் ஒரு போரில் எஜமான் வேண்டுகோளுக்கு இணங்க குஞ்சாலி மரைக்காயர் அவர்கள் பெரும் படையுடன் வந்து பரங்கியர்களை விரட்டி அவர்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள். இலங்கை அரசர் மாயதுன்னே, தஞ்சை அரசர், கோழிக்கோடு அரசர் போன்றவர்கள் எஜமானின் வேண்டுகோளுக்கு இணங்கி அனைத்து படை உதவிகளையும் செய்து பரங்கியருக்கு எதிராக போரிட செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக அந்நியர்களை ஒழித்து, நம்மையும், நம் நாட்டு மக்களையும் கலாச்சார சீரழிவிலிருந்து காத்துள்ளதை நினைத்து நாம் பெருமையடையாமல் இருக்க முடியாது. சீரழிவிற்கு உட்பட்ட மாநிலம் கோவா இன்று நம் கண் முன்னே காட்சியளிக்கிறது. இம்மாநில பூர்வீக குடிமக்கள் தன் சொந்த முகவரி இழந்து, இந்தோ போர்த்துகீசியர்களாக விளங்குகின்றனர். தன் உணவு, உடை, பாரம்பரியம் எதுவும் இன்றி குறிப்பாக முஸ்லிம் பெயரிலும் சிலர் உள்ளது வேதனையான விஷயம் இந்த

கொடுமையிலிருந்து நம்மையும் நம் நாட்டையும் எஜமான் பாதுஷா நாயகம் காத்துள்ளனர் என்பதை அறியும் போது அவர்களுக்கு நன்றி சொல்ல நம் வாழ்நாள் போதாது. அடுத்து அவர்களது முக்கிய பணிகளில் குறிப்பிட தக்க ஒன்று, தமிழகத்திலும், கேரளத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களில் பெண்கள் மார்பில் துணியில்லாது திரிந்த அவலம். அதை மேல்தட்டு மக்கள் அனுமதித்து இருந்தனர். இதை கண்டு வெகுண்டு எழுந்த எஜமான் அவர்கள், இதை முற்றிலும் தடை செய்தார்கள்.

பெண்களின் மகத்துவம் பற்றி கூறியும் குலத்தாழ்ச்சி என்பதை இறைவன் வெறுக்கிறான் என்பதையும் எடுத்துக் கூறி, அந்த தாய்மார்களை மானமுடன் வாழச் செய்தனர். அவ்வாறாக திரிபவர்களை அடித்தும் உடையணிய செய்துள்ளனர். எஜமான் அவர்களின் கருணையால் அவர்களின் இந்த திருப்பணியால், காலம் காலமாக நிலவி வந்த இந்த குலத்தாழ்ச்சி பெண்களின் அவல நிலை எஜமான் வாழ்ந்த நாட்களிலேயே மாற்றியமையப்பட்டுள்ளது. பெண்கள் மானமுடனும் மரியாதையுடனும் வாழ்ந்தனர் என்ற அறிய செய்திகளும் நமக்கு கிடைக்கிறது. மக்கள் அனைவரும் அமைதியுடனும் திருமண உறவு பலத்துடனும், ஆரோக்கியமான சமுதாயமாக வாழ அனைத்து சேவைகளையும் செய்து வந்தனர். இதற்கு இடையே தம் அருமை மகனார் செய்யது முஹம்மது யூசுப் தாதா அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க எண்ணி தகுந்த இடத்தையும் தேர்வு செய்தனர். பெருவணிகர், ஹாஜா மக்தூம் யமானி, பீபி பாத்திமா அவர்களின் புதல்வியாரை மணமுடித்து வைத்தனர். முதலில் பெண் தர மறுத்த யமானி அவர்கள் சில பிரச்சனைகளை சந்தித்து எஜமான் மகிமையை உணர்ந்ததும் உவப்புடன் பெண் கொடுத்தனர். சின்ன

எஜமான் அவர்களும், துணைவியார் சுல்தான் பீபி அம்மா அவர்களும் இவ்வுலகில் நீண்ட காலம் வாழ்ந்து, ஆறு ஆண் மக்கள், இரண்டு பெண் மக்கள் ஆக எட்டு குழந்தைகளை பெற்றனர். அவர்கள் அனைவரும் மணிமுத்துகளாக பிறந்தனர். தம் பாட்டனார் பாதுஷா நாயகம் செய்த சேவைகளை தொடர்ந்து செய்தனர். அவர்களில், மதுரை திருமயம் அருகே அடங்கி மக்களால் காட்டு பாவா சாஹிபு என்று அன்புடன் அழைக்கப்படும் பாவா பஹ்ருத்தீன் சஹீது வலி அவர்களும், நத்தம் என்ற ஊரில் ஹமீதுல் ஆஷிக்கின் சாகிப் (சஹீது) என்பவர்களும் அடங்கி உள்ளனர். நாகூர் தர்பாரிலேயே அடங்கியுள்ள சுல்தான் கபீர் சாஹிப் நாயகம் மற்றும் சுல்தான் ஹக்கானி சாகிப், நூருத்தீன் காமில் சாகிப், சுல்தான் சகிர் சாகிப் அவர்களும், பெண் மக்களான பீபி ஜொகரா சாகிபா அம்மாள், பீபி பாத்திமா சாகிபா அம்மாள் போன்றவர்களும் நாகூர் தர்ஹா வளாகத்திலேயே அடங்கியுள்ளனர். இவர்களின் வாரிசுகள் பேரர்கள் பலரும் இங்கேயே அடக்கமாகியுள்ளனர்.

அவர்களின் தொடர்வழி வாரிசுகள், பலர் இன்றும் இங்கேயே வாழ்ந்து வருகின்றனர். தன் வாழ்நாள் முழுவதும் மார்க்கப் பணியும், மக்கள் நலப்பணியும் செய்து மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்று நின்ற பாதுஷா நாயகம் என்ற பெயர் தென்னிந்தியாவில் அனைத்து மக்களாலும் மத, நிற, குல பேதமின்றி, இன்றும் அன்பு பொங்க, ஒலித்து வரும் அழகிய திருநாமத்திற்கு சொந்தக்காரார்கள் தான் எஜமான் ஷாகுல் ஹமீது நாயகம் அவர்கள். ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு முன்பு வரை மக்கள், கடல் வணிகத்தை சார்ந்தே நின்றனர். நாகப்பட்டினம், காரைக்கால், காயல்பட்டினம், ராமநாதபுரம், கீழக்கரை மற்றும் பெருவாரியான கேரளப் பகுதிகள், இன்று அனைத்தும் கடல்

வாணிப தலங்களின் மிக முக்கிய பகுதிகளாகும். பெருங்களவாடும் எண்ணத்துடனும் கொள்ளையடித்து இப்பகுதிகளை கைப்பற்ற வந்த டச்சு மற்றும் போர்த்துகீசியர்கள் கடும் சோதனையும், வேதனையும், இழப்பும் கண்டு, வெறுமனே திரும்பி சென்றனர். பரம்பரை வாணிபம் செய்த முஸ்லிம்கள் மற்றும் செட்டியார்கள், அதை சார்ந்த அநேக வணிக மக்கள் அமைதியுடனும், செழிப்புடனும் வாணிபம் செய்து மகிழ்ந்தனர். கலாச்சாரம், கல்வி முறை, பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டது. இத்தனையும் சாதித்த இறையருள் பெற்ற மகான் தான் இந்த நாகூர் பதியில் மறைந்த வாழும் அரசருக்கு அரசர் ஷாஹுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்கள். தன் வாழ்நாள் முழுவதும் அரசர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து அந்நிய சக்திகளின், தீமையை எடுத்து வறி அநேக நேரங்களில் படை உதவி பெற்று, தன் சீடர்களுடன் போர்க்களம் கண்டு இன்று நாம் மானமுடன் வாழ்ந்திட வழி செய்த அவர்களின் வாக்கும், கிருபையும் கராமத்து என்ற அற்புத நிகழ்வும் அன்றும் இன்றும் நடந்து கொண்டே வருகிறது.

அவர்களின் வாழ்நாளில் நலம் பெற்ற தஞ்சை மன்னர் முதல், தச்சன் வரையில் அநேக கராமத்து நிகழ்வுகள். தன் வாழ்நாள் பிறகு, பழனியாண்டிபிள்ளை முதல் மகாதேவ ஐயர் வரை குல உயர்வு தாழ்வின்றி அனைவருக்கும் அருள் செய்த மகிமை, நோயுற்று வருவர், தீராது என்ற நிலையில் வந்தவர், திரும்பி செல்வர் "ஜெயம் என்ற மகிழ்வில் இது ஒருவர் இருவர் அல்ல. கோடிக்கும் அதிகம். இந்த மகானின் மகிமையில் அற்புதத்தில் பலன் அடைந்தவர் இல்லாதவர் இல்லை என்றே சொல்லலாம். இத்தனை அற்புதங்கள் செய்த, செய்து வரும் மகான் பாதுஷா நாயகம் அவர்கள், ஹிஜ்ரி 978 ம் ஆண்டு, அரபி மாதம் ஜமாத்துல் ஆகிர் பிறை 10ல்,

வெள்ளிக்கிழமை அதிகாலை தன் பொன்னுடலை இந்த பூவலகம் விட்டு மறைத்துக் கொண்டனர். தன் இறப்பு, அதன் பின் செய்ய வேண்டிய கடமைகள் போன்றவற்றை தன் அன்பு மகனார் செய்யது முஹம்மது யூசுப் சாஹிப் நாயகம் அவர்களிடம் தெரிவித்தனர். அப்படியே செய்து வந்த யூசுப் நாயகம் அவர்களை, மக்கள் "சின்ன எஜமான்" என்ற அன்பு அடைமொழியுடன் அழைத்து வருகின்றனர். தன் தந்தை நாயகத்தின் சொல், செயல், வாக்கு இவைகள் மூலம் அவர்களின் திருப்பணியை செய்து நீண்ட காலம் வாழ்ந்த நாயகம் அவர்கள் அரபி மாதம் துல்ஹஜ் மாதம் பிறை 03 அன்று இவ்வுலகை விட்டு மறைந்தனர். தந்தையிடமே விலாயத்தும் கிலாபத்தும் பெற்ற நாயகம் அவர்கள், அவர்களின் அருகிலேயே அடக்கமாகி உள்ளனர். இவர்களின் அருகிலேயே தனது துணைவியார் செய்யது சுல்தான் பீவி அம்மாவும் அடக்கமாகியுள்ளனர். ஏறத்தாழ 500 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் இந்த தர்ஹா வளாகம் பல பக்தர்களால் பல தொகுப்பாக பல காலங்களில் கட்டப்பட்டது என்றாலும் இன்று பார்த்தால் அவை ஒரே காலத்தில் கட்டியது போன்ற காட்சியளிக்கும். ஏறத்தாழ அரண்மனை போன்றே காட்சியளிக்கும். இந்த தர்பார் போன்ற வடிவமைப்பு உலகில் வேறு எங்கும் காணமுடியாத அதிசயம். அதிஅற்புதம் திகழும் புண்ணிய பூமி. எஜமானரின் சன்னதிக்கு ஆயிரம் பேர் வருவார்கள். ஆயிரம் பேர் செல்வார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு குறை. செல்லும் போது மன நிறைவு. இன்றும் இது புத்திக்கு புரியாத அதிஅற்புதங்கள். கண்ணால் கண்ட மக்கள் பலர் அற்புதம்! அற்புதம்!! ஆனந்தம்!!! எந்த எண்ணத்தில் இந்த தர்பாரில் நுழைகின்றோமோ அந்த நாட்டங்கள் நிறைவேறும் அற்புதம். அறிஞர்கள், ஞானியர்கள் அறிவுப்பசிக்கு அங்கேயே தீர்வு. பஞ்சம் பசியுடன் வரும் பாமர மக்களுக்கு, வயிற்றுப்பசி

போக்கும் அற்புதம். என் அறிவிற்கும், வயதிற்கும் தெரிந்தவரை, இந்த சிறிய ஊரில் எத்தனை மக்கள், எத்தனை ஏழைகள், எத்தனை வெளியூர்வாசிகள், எத்தனை நோயாளிகள் அவர்கள் அனைவரும் பசிப்பட்டினியுடன் இந்த தர்பாரில் இருந்ததே இல்லை என்று இங்குள்ள மக்களிடம் கேட்டறியும் போது ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியமே தோன்றும். எப்படியும் எங்களுக்கு சோறு கிடைத்து விடும் என்று அந்த மக்களின் நம்பிக்கை வீண் போனதே இல்லை. ஆம், அத்தனை மக்களுக்கும் எஜமான், பல பேர் மூலம் உணவளித்து கொண்டு தான் உள்ளார்கள்.

இது நாளையும் நடக்கும், நடந்து கொண்டே இருக்கும். ஏழைகளின் துயர், வசதிப்படைத்தவர்களின் குறை, நோயாளிகளின் வேண்டுதல், பில்லி, சூனிய பாதிப்புகளால் பேதலித்த மக்கள் இது போன்று ஆயிரம் ஆயிரம் மக்கள் நலம் வேண்டி நம்பிக்கையுடன் வந்து நலம் பெற்று செல்லும் அதிசய இடம் தான் இந்த நாகூர் தர்ஹா. இந்த நாயகம் தமிழகம் வந்தது முதல் அவர்கள் நாகூரில் தங்கியிருந்த ஏறத்தாழ 28 ஆண்டு காலம் வரை அவர்களின் பலனையும் அற்புதத்தையும் உணர்ந்த முஸ்லிம் மக்கள் செய்த நன்றிகளின் ஒருபாகம், தன் வீடுகளில் தன் வாரிசு ஒருவருக்கு நிச்சயம் எஜமானின் பெயர் ஒன்று சூட்டி மகிழ்ந்தனர். அப்துல் ஹமீது, ஷாகுல் ஹமீது, காதிர் மீரா, நாகூர் மீரா, நாகூர் பிச்சை என்ற பெயர் இல்லா பிள்ளை எந்த வீடுகளிலும் இல்லாது இருந்தது இல்லை. இம்மாநில மக்கள் எஜமானின் மீது வைத்துள்ள பிரியத்திற்கு இதையே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக கூறலாம். முஸ்லிம்களை விட இந்து பெருமக்கள் தன் குழந்தைகளுக்கு நாகூர் அடிமை நாகூரான் என்று எஜமான் ஊர் பெயரிலேயே பெயர் சூடி மகிழும் மக்கள் இன்றும் இருந்துக் கொண்டே உள்ளனர். ஞானியர்

பெருமக்கள் பலர் தன் குரு தேடி அனுமதி பெற்று, சரியான குருவை அறிந்து அருள் பெற்று செல்லும் நிகழ்வு இன்று வரை நிகழ்கிறது. அதில் அடியேனும் ஒருவன் என்று பெருமை கொண்டு சொல்லுவேன். அத்தகைய மகிமையும் மகத்துவமும் நிறைந்த மாமேதை, ஞானி, தவஞானி, போர்வீரர், சமுதாய சேவகர், மார்க்க அறிஞர், மருத்துவர், மனநல மருத்துவர் என்ற பன்முக வித்தகர்தான் இந்த குத்புல் அக்தாப், குத்புல் மஜீது, செய்யிது சாதாத், செய்யிது அப்துல் காதிர், ஷாஹுல் ஹமீது மீரான் சாகிபு நாகூரி காதிரி அவர்கள். தன் குலத்தாலும், குணத்தாலும் உயர்வான இவர்களின் இந்த தர்பாரில் தரிசித்தவர்கள் அனைவரும் பாக்கியவான்களே.

எஜமான் அவர்களின் போதனைகளும், உபதேசங்களும் தமிழ் மொழியில் அவ்வளவாக இல்லை. அதற்கு காரணமும் உண்டு. அக்காலம் தமிழ் மொழியின் சரிவு காலம் என்று கூட சொல்லலாம். எஜமான் வாழ்ந்த இந்த கால கட்டத்தில் ஆட்சி செய்த தெலுங்கு நாயக்க மன்னர்கள் மற்றும் மராட்டிய மன்னர்கள் எந்த தமிழ் நூலுக்கும் முக்கியத்துவம் அளிக்காமலேயே இருந்துள்ளனர். எனவே எஜமான் பற்றிய குறிப்புகள், உபதேசங்கள், ஆங்கிலம் மற்றும் உருது மொழியில் மட்டும் மிக குறைந்த அளவே உள்ளது. மேலும், அநேக நிகழ்வுகள், வாய்மொழி, செவிவழி செய்தியாக மட்டுமே பதியப்பட்டுள்ளது. சத்தியம் மட்டுமே தொடர்ந்து நிலைபெறும் என்பதற்கு இவைகள் உதாரணம் என கொள்ளலாம். அப்படி தமிழ் சரிவுற்று இருந்த காலத்தில் நாகூர் வந்த எஜமான், தன் காலத்திற்கு பின்பு தமது நாகூருக்கு தமிழ் மொழி கோட்டை என்று சொல்லும் அளவிற்கு அறிஞர்களையும், கவிஞர்களையும், புலவர்களையும் இன்று வரை தொடர்ந்து அளித்துக்

கொண்டே உள்ளனர். குலாம் காதிறு நாவலர், இவர் அளவிற்கு தமிழ் பண்டிதர் ஒருவர் தமிழகத்தில் இருந்தார்களா? என்ற அளவிற்கு தமிழ் பண்டித்துவம் பெற்ற மேதை. எஜமான் அவர்களைப் பற்றி பல கவிநூல்களை இயற்றியவர். மேலும் அப்துல் கையும், இதயதாசன், ஆபிதீன் புலவர், நாகூர் சலீம், ஹத்தீப் சாகிப், அப்துல் வஹாப் பாகவி, நாகூர் ரூமி, இஸட். ஜபருல்லா போன்ற மேதைகளையும் கூறலாம். எஜமான் அவர்களின் புகழை, தன் இனிய நாதம் மூலம் பாடிவரும் நாகூர் ஹனிபா, எஸ்.எம்.ஏ. காதர் போன்ற பாடகர்களையும் நம் எஜமான் இந்த தமிழக மக்களுக்கு அளித்துள்ளார்கள்.

மேலும், இந்த தர்ஹா மற்றும் நிர்வாக பராமரிப்புக்காக தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் துளசி மகாராஜா 4000ம் ஏக்கர் விளை நிலங்களையும், 115 கிராமங்களையும் எஜமானுடைய தர்ஹாவிற்கு அளித்து பெருமை பெற்றுக் கொண்டார் என்பதும் வரலாற்று செய்திகள். இத்தகைய பெருமைக்கும் மகிமைக்கும் உரிய நாகூர் தர்ஹாவின் எஜமான் பாதுஷா நாயகம் அவர்களின் கந்தூரி விழா, தமிழகம் மட்டுமல்லாமல் தென்னிந்தியா, வட இந்தியா மற்றும் உலகம் முழுவதும் நேசம் கொண்ட மக்கள் வந்து விழாவில் பங்கேற்று மகிழ்ந்து பலனடைந்து சென்று வருகிறார்கள்.

200 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகம் மற்றும் சிங்கப்பூர் போன்ற இடங்களில் எஜமான் மீது பிரியம் கொண்ட அன்பர்கள், பக்தர்கள் பல இடங்களில் நினைவு சின்னங்கள் பள்ளிகளைக் கட்டி, அதற்கு எஜமானின் பெயரினை சூட்டி மகிழ்ந்துள்ளனர். அவைகள் இன்றும் நினைவு சின்னங்களாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் பாதுஷா நாயகம் அவர்கள் நாகூரில் வாழ்ந்த காலத்தில் பல்வேறு மார்க்க, மக்கள் பணிகளுக்கிடையே அவர்கள் (கல்வத்து)

என்ற இறைத்தவம் புரிந்த இடங்கள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அவைகளில்

1. நாகூர் தர்காவிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில் கடற்கரையோரம் அமைந்துள்ள சில்லடி தர்கா என்ற இடத்தில் எஜமான் பாதுஷா நாயகம் அவர்கள் தவம் புரிந்து பல அற்புத நிகழ்வுகளை நடத்தினார்கள். இங்கு ஆண்டுதோறும் சபர் மாதம் பிறை 10ல் கந்தூரி (உரூஸ்) விழா நடைபெறும்.

2. நாகூர் தர்காவிலிருந்து வடக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் (காரைக்கால் ரோட்டில்) வாஞ்சூர் தர்கா என்ற இடத்தில் பாதுஷா நாயகம் அவர்கள் தங்கியிருந்து பல அற்புதங்களை செய்தார்கள். இன்றும், என்றும் நடைபெறும் வண்ணம் ஆண்டுதோறும் ரஜப் மாதம் பிறை 10ல் கந்தூரி (உரூஸ்) விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

3. நாகூர் தர்காவிலிருந்து மேற்கே சரியாக இரண்டாவது கிலோ மீட்டரில் (ஆழியூர் ரோட்டில்) மேலநாகூர் என்னும் இடத்தில் இறையச்சம், செல்வ செழிப்புடன் பெருவணிகராய் வாழ்ந்து வந்த பெருமானார் (ஸல்) வழி வந்த ஹலரத் செய்யது க்வாஜா மஹ்தூம் (ரலி), ஹலரத் செய்யிதா பீவி பாத்திமா (ரலி) ஆகியோரின் மகளார் இறையச்சமிக்க மாதரசி செய்யிது சுல்தான் பீவி அம்மாவை பாதுஷா நாயகம் தனது மகனார் சின்ன எஜமான் செய்யது முஹம்மது யூசுப் சாஹிப் (ரலி) அவர்களுக்கு மணம் முடித்து சிறப்பு சேர்த்தார்கள். அம்மா நாயகியின் குடும்பத்தினர்களான தாயார், தகப்பனார், சகோதரி, சகோதரர்கள் அனைவர்களும் மேலநாகூரிலேயே வாழ்ந்து மறைந்து நல்லடக்கம் செய்யப்பட்டு தர்கா ஷரீஃபாக அமைந்துள்து. இங்கு ஆண்டுதோறும் ஜமாத்துல் அவ்வல் பிறை 16ல் கந்தூரி (உரூஸ்) விழா சிறப்பாக நடைபெறும்.

4. நாகூர் தர்காவிலிருந்து தெற்கே அரை கிலோ மீட்டர் தொலைவில் நமது பாதுஷா நாயகத்தின் நாகூர் வருகைக்கு முன்பாக நல்லடக்கமான ஹலரத் ஹாஜி நூர் சாஹிப் (ரலி) தர்கா ஷரீப் உள்ளது. இங்கு எஜமான் அவர்கள் நேரில் சென்று மஹானை ஜியாரத் செய்தார்கள் என்ற சிறப்புமிக்க இடமாகும். இங்கு ஆண்டுதோறும் ஸபர் மாதம் பிறை 19ல் கந்தூரி (உரூஸ்) விழா நடைபெறும்.

நாகூர் எஜமானை தரிசிக்க வரும் பக்தர்களில் பலரும் மற்றும் உள்ளூர் மக்களும் மேற்கண்ட இடங்களுக்கு தினமும் சென்று ஜியாரத் செய்த வண்ணம் பல நன்மைகளையும் பெற்று வருகிறார்கள்.

இத்துணை மகிமையுடைய எஜமானின் சன்னதிதான் இந்த நாகூர் என்ற புனித இடம். மாதிஹே ரசூல் சதக்கத்துல்லா அப்பா, குணங்குடி மஸ்தான் சாகிப் அப்பா போன்ற ஞானிய மேதைகளும் அநேக இந்து சைவ பண்டிதர்களும், கைகட்டி, வாய்பொத்தி தரிசனம் பெற்ற மகத்துவம் பொருந்திய புண்ணிய இடம் தான் இந்த நாகூர். அத்தகைய மகான்களும், மன்னர்களும் வருகை புரிந்த இடத்தில் நாமும் சென்று வருகிறோம் என்பதே மனதை பெருமை கொள்ள செய்யும் அற்புதமான விஷயம். மறைந்து மிளிரும் சுடராக பெருமானார் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் குலக் கொழுந்து ஒன்று இங்கே இருக்கிறது என்ற சத்திய உண்மையை எண்ணும் போது, நாம் அடைந்திடும் இன்பத்திற்கு அளவே இல்லை. தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அவர்களின் குறை தீர்ப்பது முதல் அறிஞர், ஞானியர் பெருமக்களின் ஐயம் தீர்த்திடுவது வரை அநேக அதிஅற்புதங்கள் உலகிற்கு தெரிந்தும் தெரியாமலும் நாளும் நடந்து வருவது சத்தியத்திலும் சத்தியமான உண்மை. அந்த அற்புதத்தை அனுபவிக்க விரும்பும் அன்பர்களில் ஒருவராக நீங்கள் விரும்புகிறீர்களா ?

வாருங்கள் வாருங்கள்

இந்த நன் நாகூர் பதிக்கு விஜயம் செய்யுங்கள். உங்கள் நல் எண்ணங்களும், நியாய தேட்டங்களும் நிறைவேறும். எஜமான் பாதுஷா நாயகம் பொருட்டால் வல்ல இறைவன் உங்களுக்கும், இதை படித்து பயனுற்ற அனைவருக்கும் நல்லருள் புரிந்திடுவானாக... ஆமீன்... ஆமீன்... யாரப்பில் ஆலமீன்.

இந்த நூலை மறுபதிப்பு செய்யவும் வெளியிடவும் உரிமம் பெற்ற முகவரி

ஹாஜி. M.Y. சுல்தான் கபீர் சாஹிப், காதிரி
"மெஹர் மஹால்"
28/4, தர்கா குளம் தென்கரை,
நாகூர் ஷரீப்.
செல் : 98424 88248, 94436 78983



M.Y.S. ஹாஜியார்

உங்கள் தகவல்கள், விமர்சனங்களை
riyazalijaffer@yahoo.com
ashikariyaz@gmail.com
என்ற இணைய முகவரிக்கு அனுப்பவும்

தகவல்களை சேகரிக் உதவிய கீழ்க்கண்ட இணைய தளங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

www.keralawindow.com
www.abedheen.wordpress.com
www.e-malabari.com
www.aulia-e-hind.com
www.sunniforum.com

நாகூர் தர்காவின் பரம்பரை கலீபாவும், டிரஸ்டியும், மானேஜிங் டிரஸ்டியுமாகிய முஹல்லி. **K. முஹம்மது கலீபா சாஹிபு, காதிரி** அவர்களின் வாழ்த்துரை!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே.

கருணைக்கடல் எஜமான் நாகூர் பாதுஷா நாயகத்தின் கருணை என்னும் துஆ அனைவர்களுக்கும் உரித்தாகட்டும். ஆமீன்.

அனைத்து மதத்தினர்களும் அருள்வேண்டி தரிசித்து வரும் நாகூர் நாயகத்தின் வரலாறு நூல்களை எத்தனையோ மார்க்க மேதைகளும் அறிஞர்களும் ஆசிரிய பெருமக்களும் உருவாக்கி தந்துள்ளார்கள். அந்த வரிசையில் நாயகத்தின் மீது அளவில்லா பக்தி கொண்ட இளைஞரும் இந்நூலாசிரியருமான சகோதரர் அடியற்கை **M.J. ரியாஜ் அலி** அவர்கள் தான் அனுபவித்த அனுபவித்தவர்களால் சொல்லப்பட்ட அறியப்பட்ட மற்றும் பல நூல்களிலிருந்தும் பல நிகழ்வுகளை விபரமாகவும் சுருக்கமாகவும் அழகாக இந்நூல் மூலம் விளக்கி இருப்பது பாராட்டுக்குரியது. அதுவும் ஆன்மீக தந்தையும் நமது சாஹிப்மார்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவரும் நமது தர்ஹா ஆலோசனைக்குழு உறுப்பினருமாகிய ஹாஜி. **M.Y. சுல்தான் கபீர் சாஹிப், காதிரி** அவர்கள் மூலம் வெளியிட்டிருப்பது மிகவும் பொருத்தமான செயலாகும். மேலும் இது போன்ற பணிகள் தொடரவேண்டும் என இதயப்பூர்வமாக துஆ செய்கிறேன். வல்ல நாயன் நமது நாயகத்தின் பொருட்டால் அனைவர்களுக்கும் நல்லருள் புரிவானாக. ஆமீன்.

ஆஷிகே ரசூல் சூஃபி ஹாஜி ஹாஜா முஹைதீன் சாஹிபு காதிரி அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

Haji. Haja Mohideen Khadiri
Retd. Post Master
Rajaghiri 614 204.

I feel a great pleasure in reading the brief biography of his highness - the Mystic emporer and Spiritual light house of entire South East Asia - Kadir Oli of Nagore Shariff - written in beautiful Tamil by Mr. J. Riaz Ali. (The Peace and Pleasure of Almighty Allah ever be on his highness - the Sultan of Soofies Kadir Oli of Nagore Shariff). Their service for Islam and for the mankind irrespective of Colour creed caste is calculable especially those who suffer by witch and evil, His holiness is the Doctor of all Doctors and spiritual Magistrate appointed by Allah and who uplifts the Justice of Allah for the depressed and suffered by witch and evil. May Allah - The Lord of all the worlds seen and secret bles the pure perfect by the waseela of Kadir Oli of Nagore Shariff for ever.

with all best wishes by heart and soul

Haja Mohideen Khadiri
Dt Rajaghiri
12.5.10